12.06.2024

CC. 94/2017

PW- 4, சின்னபாண்டி

**மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் கு.வி.**

நான் விவசாயம் செய்து வருகிறேன். புகார்தாரர் விருமாண்டியும் முருகேசனும் எனது சொந்தக்காரர் என்றால் சரிதான். சொந்தக்காரர் என்ற முறையில் முருகேசன் விருமாண்டியிடம் தெரிந்த நபருக்கு பணம் கொடுத்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. விருமாண்டி என்பவர் விவசாய வேலை செய்து வருகிறார். விருமாண்டிக்கு சொந்தமான செங்கல் கால வாசல் மற்றும் கொடுக்கல் வாங்கல் விபரம் எனக்கு தெரியாது. சம்பவத்தன்று விருமாண்டிக்கும் முருகேசனுக்கும் பிரச்சினை நடந்த போது நான் அந்த இடத்தில் இல்லை. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நேராக நான் காவல் நிலையம் சென்றுவிட்டேன். நான் எனது முதல் விசாரணையில் போலிசார் கேட்டுக் கொண்டதற்கு இனங்க சாட்சியம் அளித்தேன்.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் போலிசார் விசாரணையிலும் நீதிமன்ற முதல் விசாரணையிலும் எதிரி முருகேசன் அ.சா.1 முருகேசனை உடைகல்லை எடுத்து விருமாண்டியை அடித்து காயம் ஏற்படுத்தி அவரை மிரட்டினார் என கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**